[2005 மார்ச் 9

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் கட்ட Master Plan Complex வருவாய்த் துறையினால் 12-9-1995-ல் அரசாணையிடப்பட்டது. விழுப்புரம் மாவட்ட கருவூல அலுவலகம் கட்ட 0.25 எக்டேர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இதற்கான திட்ட மதிப்பீடு 53 இலட்சத்திற்கு சென்னை தலைமைக் கட்டட வல்லுநர் மூலமாகத் தயாரிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் 10 விழுக்காடு உயர்வுத் தொகையாக எடுத்துக்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது விழுப்புரம் மாவட்ட கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு 70.54 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டுள்ளதால் அதன் பணிகள் அதிகரித்துள்ளன. எனவே, பொதுமக்களின் நலன் கருதி கருவூலத்திற்குப் புதிய கட்டடத்தை விரைந்து கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கம்போல அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 122, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

122—

சிறு தொழிற்சாலைகள்

*** 24061—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சோப்பு தயாரித்தல், ஊதுவத்தி தயாரித்தல் போன்ற சிறு சிறு தொழிற்சாலைகளை அரசு துவங்குமா?

2005 மார்ச் 9]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லையென்கின்ற பதிலை அமைச்சரவர்கள் மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டம் இன்று வறுமையில் மிக அதிகமாக உழன்று கொண்டிருக்கின்றது. அங்கு பெண்களுக்கெல்லாம் நல்ல வேலைவாய்ப்பு இல்லாமல், பொதுவாக பீடி சுற்றுகிற வேலையில் அதிகமாக இருப்பார்கள். அந்த பீடி சுற்றுகிற வேலையிலும் பீடிக்கு சரியான விலை இல்லாத காரணத்தினாலே, இன்று பெரிதும் அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சூழலில் சோப்பு தயாரித்தல், ஊதுவத்தி தயாரித்தல் போன்ற சிறு தொழில்களை ஊக்குவிக்கின்ற வகையில், சில தொழிற்சாலைகளை அரசே ஆங்காங்கே திறக்கலாம். ஒன்றியத்திற்கு ஒன்று என்று தொடங்கலாம். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாகக்கூட, என்னுடைய மாவட்டத்திலே அதிகமாக தொழிற்சாலைகள் ஏதும் தொடங்கப்படவில்லையென்பதால், அந்த வகையிலாவது—நீங்கள் ஒன்றியத்திற்கு ஒன்று என்று தொடங்கலாம் உலக மகளிர் தினத்தில் நேற்றுகூட, நீங்கள் மிக அருமையான கருத்துகளையெல்லாம் சொன்னீர்கள். மகளிருடைய நலன் கருதி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும்—20 ஊராட்சி ஒன்றியங்கள் என்னுடைய மாவட்டத்தில் இருக்கின்றன, அந்த 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் குறைந்தது இரண்டு கோடி ரூபாய், மூன்று கோடி ரூபாய் நீங்கள் முதலீடு செய்து, பெண்களுக்கென்று தனியாக, சோப்புத் தயாரித்தல், ஊதுவத்தி தயாரித்தல் போன்ற தொழிற்சாலைகளை உருவாக்கி, வேலைவாய்ப்பினைத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை, தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இதெல்லாம் தொடங்கப்பெற வேண்டுமென்று சொன்னார்கள். சோப்பு பவுடர் தயாரிப்பது, ஊதுவத்தி தயாரிப்பது போன்றவை எல்லாம் குறைந்த முதலீட்டிலே தயார் செய்யக்கூடிய பொருட்கள். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் முதலீட்டிலே கொண்டு வரப்படுபவை மிகப் பெரிய தொழிற்சாலைகள் அல்லது 20 இலட்சம் ரூபாய் முதலீட்டிலே கொண்டு வரப்படக்கூடிய

சிறு தொழிற்சாலைகள். ஆனால், சோப்பு பவுடர், ஊதுவத்தி தயாரித்தல் போன்ற சிறிய குடிசைத் தொழிலாகச் செய்யக்கூடிய தொழில்களுக்குத் தற்போது பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், மானியத்துடன்கூடிய கடன் உதவியைப் பெற்று, வேலூர் மாவட்டத்திலே பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாக அணுகி பல பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு, 2004-2005 ஆம் ஆண்டிலே ரூ.25.14 இலட்சம் மதிப்பீட்டிலே 24 பெண்களுக்குக் கடன் வழங்கப்பட்டு, பயன்பெற்றிருக்கிறார்கள். மேலும், இதுபோன்ற பெண்கள் இந்தச் சிறிய தொழில்களைச் செய்வதற்கு முன்வருவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சம்பந்தப்பட்ட நபர்களை, அந்த மாவட்டத்தின் தொழில் மையத்தினுடைய மேலாளரை அணுகும்படி கேட்டுக்கொள்ள நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று சிறு சிறு தொழில்களின் மூலமாகத்தான் சோப்பு தயாரித்தல், ஊதுவத்தி தயாரித்தல் போன்றவற்றையெல்லாம் தயாரிக்க முடியும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதை நீங்கள் குறைந்த அளவிலே செய்கிறபோது அதிகமான வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியாது. குடிசைத் தொழிலாக இருப்பதனால்தான் என்னுடைய கேள்வியிலேயே அரசு துவங்குமா என்று கேட்டிருக்கிறேன். Mysore Sandal Soap, எவ்வளவு பெரிய தொழிற்சாலை. எவ்வளவு பேருக்கு வேலை கொடுக்கிறது. அதேபோல Hamam, எத்தனை பேருக்கு வேலை கொடுக்கிறது. அதேபோல இந்த அரசாங்கமே ஒரு பெரிய அளவிலே தரலாம். நம் ஊரிலே ஜவ்வாது மலை அருமையான சந்தனம் கிடைக்கக்கூடிய ஓர் இடமாக இருக்கிறது. என்னுடைய வேலூர் மாவட்டத்திலேயே தெற்குப்பட்டு என்ற இடத்திலே சந்தன எண்ணெய் தயாரிக்கின்ற ஒரு ஆலையை Forest Department - வனத் துறை-இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கிறது. அந்த எண்ணெயை முழுமையாகப் பயன்படுத்தி, நீங்களே ஒரு பெரிய தொழிற்சாலையை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்று 20 இலட்சம் ரூபாய், 10 இலட்சம் ரூபாய் என்று அரசே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக சிறியதாகத் தொடங்குவதைவிட, பெரிய அளவிலே—ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும்

2005 மார்ச் 9]

4 கோடி ரூபாய்தான் செலவு செய்கிறீர்கள். 5 கோடி ரூபாய்கூட நீங்கள் ஒதுக்கீடு செய்யலாம். ஏனென்றால், பெண்கள் சுய உதவிக் குழுக்கள் என்கிற அமைப்பின்மூலமாக நிறைய பெண்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் குழுக்களில் வந்து சேர்கிறார்கள். திக்குத் தெரியாத காட்டில் விட்டதுபோல பாவம் அவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு முழுமையாக வேலை கிடைக்கக்கூடிய வகையிலே நீங்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி, எங்களுடைய மாவட்டத்திலே பெரிய அளவிலே அரசே இதுபோன்ற தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோப்பு தயாரிக்க வேண்டுமென்றால் முதலிலே போக்குவரத்து வசதி உள்ளதாக, தண்ணீர் அதிக அளவிலே கிடைக்கக்கூடிய பகுதியாக இருக்கவேண்டும். அந்த இடத்திற்கு அருகிலேயே அந்த மூலப் பொருள்கள், raw materials கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புகளும் இருக்க வேண்டும். அதற்குத் தேவையான பணியாளர்களும் எதிர்பார்க்கிற விதத்திலே, கிடைக்கக்கூடிய சூழ்நிலையிலே அந்தப் பகுதி அமைந்திருக்க வேண்டும். அதேபோல, அங்கே தயாரிக்கக்கூடிய சோப்புகள் சுற்றியுள்ள இடங்களில் அதிக அளவில் விற்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் அமையப்பெற்றால், ஒரு சோப்பு தொழிற்சாலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக தொழில் முனைவோர்களை அணுகி, தொடங்கச் சொல்வதற்கு உரிய வாய்ப்புகளை உருவாக்கலாம். ஆனால், சோப்பு பவுடர் தயாரிக்கக்கூடிய பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்று வருகிறபோது, அவர்கள் தாராளமாக முன்வந்து உடனடியாக தினந்தோறும் வருமானம் வரக்கூடிய சுய உதவிக் குழு பெண்கள் மூலமாக தயாரிக்க வேண்டுமென்று சொன்னால், வங்கியின் மூலமாக கடன் உதவியை அவர்களுக்கு அளிப்பதற்குரிய வாய்ப்பு வசதிகளை அரசே முன் நின்று, அவர்களுக்கு உதவி செய்து, இதுபோன்ற தொழில்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோப்பு, ஊதுவத்தி போன்று, சிறுதொழில் மூலமாக பனை

வெல்லத்தைப் பயன்படுத்தி, பனை சர்க்கரையைப் பயன்படுத்தி மிகச் சிறப்பாக Chocolate போன்ற பொருள்களையெல்லாம் தயாரிக்கிறார்கள். அது சென்னையிலேகூட நடந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை, பனை மரம் அதிகமாக உள்ள நெல்லை, கன்னியாகுமரி போன்ற தென் பகுதிகளிலே உள்ள மாவட்டங்களிலேயெல்லாம் தொடங்கி அதனை கதர் அங்காடி போன்றவற்றின் மூலமாக விற்பனை செய்வதற்கு அரசு முன்வருமா? அதன்மூலம் பல பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்கின்ற நிலையில், இதை அரசு செயல்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பனை வெல்லம் அதிகமாகத் தயாரிக்கக்கூடிய பகுதிகளிலேயெல்லாம் கதர் அங்காடிகள் மூலமாக Chocolate தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியிலே எங்கு இதுபோன்ற பனை வெல்லம் தயாரிக்கக்கூடிய பகுதிகள் அதிகமாக இருக்கும் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அரசாங்கத்தின் மூலமாக அவர்களுக்கு மானியத்தோடுகூடிய கடன் உதவியைப் பெற்றுத் தந்து, இதுபோன்ற சிறு தொழில்களைச் செய்வதற்கு அரசு ஊக்குவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வில்வநாதன்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே ஊதுவத்தி செய்கின்ற தொழில் அதிகமாக நடைபெற்று வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதற்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்குவதிலும், தகுந்த கூலியை வழங்குவதிலும்கூட தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் கிராமப் பகுதிகளிலே உள்ள பெண்களிடம் அதிக வேலையை வாங்கிக்கொண்டு சரியான கூலி வழங்குவதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க, வறட்சி மாவட்டமாக உள்ள வேலூர் மாவட்டத்திலே, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்று இல்லாவிட்டாலும்கூட, பெண்கள் தயாரிக்கின்ற ஊதுவத்தித் தொழிலை ஊக்கப்படுத்தும் பொருட்டும், தகுந்த கூலியை வழங்குவதன்பொருட்டும், மாவட்டத்திற்கு ஒரு மையத்தை ஏற்படுத்தி,

2005 மார்ச் 9]

அந்த மையத்தின் வாயிலாக அதற்குத் தேவையான இடுபொருட்களை வழங்கி அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை மீண்டும், அங்கன்வாடி மையத்தின் மூலம் பெற்று, விற்பனை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் சுயஉதவிக் குழுப் பெண்கள் தயாரிக்கக்கூடிய பொருட்களை சந்தைகளிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலேயும் அவர்கள் விற்பனை செய்துகொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, இதுபோன்று தயாரிக்கக்கூடிய பொருட்களை விற்பனை செய்து, அதன்மூலம் கூலியைப் பெற வேண்டும் அல்லது இலாபத்தைப் பெற வேண்டுமென்ற நோக்குடையவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, அதுபோன்ற கண்காட்சிகளில் விற்பனை செய்கிறபோது தகுந்த இலாபத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு உருவாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற ஆலோசனைகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே பெற்று, அந்தந்தப் பகுதியிலே ஊதுவத்தி தயாரிக்கக்கூடிய பெண்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். தாமோதரன்.

திரு. எஸ். தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சுமார் 50 இலட்சம் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதைப் போக்க, புதிதாக ஆரம்பிக்கும் அனைத்து சிறு தொழில்களுக்கும் அரசு மானியம் அளிக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டிலேயிருந்து பதிவு செய்யப்பட்டு, மொத்தமாக இதுவரை தமிழ்நாட்டிலே 17,917 பேர் கடன் பெற்று பயன் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் மானியத்தோடு கடன் பெற்றவர்கள். வேலைவாய்ப்பற்ற

[2005 மார்ச் 9

பட்டதாரி இளைஞர்களுக்குத்தான் பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் கடனைப் பெற்றுத் தர முடியும். மீதியிருக்கிற எல்லா தொழில்களுக்கும் என்று சொன்னால், அதற்குத் தொழில் மேம்பாட்டுக் கழகம் இருக்கிறது, சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் இருக்கிறது. இந்தக் கழகங்களில் தகுதியின் அடிப்படையிலே அவர்கள் விண்ணப்பம் செய்வார்களேயானால் அவர்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதி என்பது, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே பணியாற்றிய தொகுதி. ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் அது நன்கு அறிமுகமான இடம். ஆகவே, நில எல்லைக்குள் நான் விரிவாகச் செல்ல விரும்பவில்லை. அங்கு கால்நடைகள் ஏராளமாக இருக்கின்றன. அருகில் கிராமப் பகுதியும் உண்டு. அங்கு கால்நடைத் தீவனத் தொழிற்சாலை அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பாரேயானால், இதுகுறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே பனைப் பொருட்களிலே, ஐஸ்கிரீமிற்கு பயன்படுத்துகின்ற பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதற்கான பயிற்சியாளர்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வருகை தந்து கொசு வலை தயாரித்தல் போன்ற பயிற்சிகளை அளித்தால் அந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் அவற்றை உற்பத்தி செய்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலை உருவாகும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சிந்திக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, மாவட்டத் தொழில் மையங்கள்மூலம் P.M.R.Y. திட்டத்தில் இதற்காக கடன் தரப்படுகிறது என்று சொன்னார்கள். மாவட்டத் தொழில் மையங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குப் பரிந்துரைக்கின்றன. ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அந்த மனுக்களை, விண்ணப்பங்களை சரிவர கவனிப்பது இல்லை. குறிப்பாக, புதுக்கோட்டை மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையங்கள் பரிந்துரை செய்கிற விண்ணப்பங்களில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அவ்வளவாக கவனம் செலுத்துவது இல்லை. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விதிமுறைகளில் இதுபோன்ற தொழில் செய்யக்கூடியவர்கள், மனு செய்திருக்கக்கூடிய விதத்திலே ஏதாவது பிரச்சினைகள் இருக்குமேயானால் காலதாமதம் ஆகுமே தவிர, மீதி எல்லா மனுக்களின்மீதும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வழங்குவதில் இதுவரை தாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.கே. இராஜா.

முற்பகல் 10-15

திரு. டி.கே. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்திலே, குறிப்பாக திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி பகுதிகளிலே ஊதுவத்தி தொழில் செய்துதான் இன்றைக்கு கிராமப்புறப் பெண்கள் பிழைத்து வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் எல்லாம் கர்நாடகாவிலிருந்து வருகின்றன. 1000 ஊதுவத்தி தேய்த்துக் கொடுத்தால் 6 ரூபாய்தான் கூலி கொடுக்கிறார்கள். எனவே, நம்முடைய கூட்டுறவுத் துறை மூலமாக அல்லது சிறுதொழில் துறை மூலமாக தமிழக அரசே மூலப்பொருட்களை வழங்கி, அந்தக் கூலியை உயர்த்திக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூலியை உயர்த்தித் தருவது என்பது இயலாத காரியம். காரணம், அவர்கள் கூட்டுச் சேர்ந்தோ அல்லது தனிப்பட்ட நபர்களாகவோத்தான் இதுபோன்ற ஊதுவத்தித் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சிறுதொழில் சேவை நிறுவனத்தின் மூலமாக நபர் ஒருவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டு வருகிறது. வியாபாரத்திற்காக நபர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது. இதிலே பங்குதாரர்களாகச் சேர்ந்து செய்வதற்குரிய வாய்ப்பு இருந்தாலும், அதற்காகவும் அரசு அவர்களுக்கு ஏற்பாடு செய்து தருகிறது. அவர்களுடைய திட்ட மதிப்பீட்டிலே 15 விழுக்காடு, ரூபாய் 7,500 வரை மானியம் வழங்கப்படுகிறது. இப்படி மானியம் வழங்கப்படக்கூடிய வசதி வாய்ப்புகளை வைத்துக்கொண்டு சொந்தமாகத் தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு வசதிகளை உருவாக்கிக் கொள்வது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிக் கடன்களைச் சிறுதொழில் தொடங்குவதற்குப் பெறுவதில் இருக்கிற சிரமங்கள் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் சொன்னார்கள். அநேகமாக, தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள நிலை அதுதான். கோவை மாவட்டத்திலும் அந்த அனுபவம் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. District Consultative Committee Meeting என்ற வங்கித் துறைகளினுடைய கூட்டங்களில்கூட இதுசம்பந்தமாக எங்களுடைய எதிர்ப்பை நாங்கள் கடுமையாகத் தெரிவித்திருக்கிறோம். விதிமுறைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்பட்ட பணத்தைப் வழங்குவதற்குக்கூட, அதிகாரிகள் தொடர்ந்து இழுத்தடித்து, நிர்பந்தித்து, கிடைக்காத அளவிலே பண்ணும்படியான போக்கு என்பது அதிகமாக இருக்கிறது. ஆகையினாலே, வெறும் கண்துடைப்புக் கூட்டங்களை இவர்கள் நடத்துகிறார்கள் என்று, சென்ற வங்கிகளினுடைய கூட்டத்தை நான் புறக்கணித்து, வெளியே வந்திருக்கிறேன். ஆகையினால், நம்முடைய மாநில அரசு இந்த மாதிரியான தொழில்களைத் தொடங்குவதற்கோ அல்லது வேறுவிதமான உதவிகளை அரசு அனுமதித்த நிலையிலே பெறுவதற்கோ இருக்கும் தடைகளை வங்கி அதிகாரிகள் கடைப்பிடிக்கக் கூடாது என்று அரசு உறுதிபூர்வமாக அறிவிக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2005 மார்ச் 9]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக மாவட்டந்தோறும் தொழில் மையங்களுடைய மாவட்டத் தொழில் மேலாளர்களோடு வங்கி அதிகாரிகளையும் இணைத்து, மாவட்ட ஆட்சித் தலைவரையும் இணைத்து, கூட்டுக் கூட்டம் நடத்தி, உடனடியாக விண்ணப்பதாரர்களுக்குக் கடன் வழங்கப்பட வேண்டுமென்று தமிழக அரசு அறிவுறுத்தியிருக்கிறது. விண்ணப்பப் படிவத்தோடு இவர்கள் கேட்கக்கூடிய விதிமுறைகள் சரியாக நிரப்பப்படவில்லை என்று சொன்னால் சில நேரங்களில் காலதாமதம் ஏற்படும். குடும்ப அட்டை, வருமான வரிச் சான்றிதழ், இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் வாங்குவதற்கான விலைப் பட்டியல், அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய தொழில், வியாபாரத்திற்கான திட்ட அறிக்கை, சான்றிதழ், உறுதிமொழிப் பத்திரம், கூட்டுத் தொழில் நிறுவனமாக இருப்பின் கூட்டு உடன்படிக்கைப் பத்திரம், இவை அத்தனையையும் ஒருங்கிணைத்து நீங்கள் வங்கிகளுக்கு, மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாக அனுப்புகிறபோது உடனடியாகக் கடன் வழங்குவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். சில நேரத்தில் இந்தக் கூட்டு உடன்படிக்கைப் பத்திரம் என்று வருகிறபோது, அந்தக் கால கட்டங்களிலே சில பேர் அந்தப் பணத்தைப் பெறுகிறவரைக்கும் கூட்டு உடன்படிக்கை வைத்துக் கொள்கிறார்கள். பணம் கிடைத்ததற்குப் பிறகு இரண்டு பேர்களுக்குள் கருத்து வேறுபாடு வந்து, தனியாகப் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறபோது, இவர்கள் விண்ணப்பப் படிவம் தருவதற்குக் காலதாமதம் ஆகிறது. ஆக, தொழில்முனைவோர்களுக்குள்ளே இருக்கக்கூடிய பிரச்சினையின் காரணத்தால் வங்கி அதிகாரிகள், தொழில் செய்யக்கூடிய இடத்தைப் போய் பார்க்கிறார்கள். ஏற்கெனவே தொழில் செய்திருப்பார்களேயானால், அதனுடைய முன்னேற்றத்தைப் பார்க்கிறார்கள். அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அத்தனை சான்றிதழ்களும் சரியானவைதானா என்று அவற்றையெல்லாம் பார்த்ததற்குப் பிறகு, வங்கிகளிலே இருக்கக்கூடியவர்கள் கடன் வழங்குகிறார்கள். அதனால் காலதாமதம் ஏற்பட்டிருக்கக்கூடும். இருந்தாலும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வங்கி அதிகாரிகளோடு, சிறுதொழில் துறையினுடைய அதிகாரிகளோடு சேர்ந்து கூட்டுக் கூட்டம் நடத்தி, விரைவிலே தொழில்முனைவோர்களுக்குக் கடன் வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.